இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு தம் சீடரை வரவழைத்து, "இந்த ஏழைக் கைம்பெண், காணிக்கைப் பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரையும் விட மிகுதியாகப் போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்" என்று அவர்களிடம் கூறினார். (மாற்கு 12:43-44)



# நல்லதொரு பூமிக்கோளத்தை விட்டுச்செல்ல ஒருங்கிணைவோம்- வேறு வழி இல்லை

**வத்திக்கான்:** COP26 என்றழைக்கப்படும் ஐக்கிய நாட்டு சபையின் காலநிலை மாற்றத்திற்கான மாநாட்டிற்கு திருத்தந்தை சிறப்பு செய்தியொன்றை அனுப்பியுள்ளார். நம் பூமிக்கோளத்தையும், காலநிலை மாற்ற நெருக்கடிகளால் மிக அதிக அளவில் துன்புறும் மக்களையும் காப்பதற்கு செயல்பாடுகள் மிக அவசரமாகத் தேவை என்பதை வலியுறுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள அச்செய்தி மடலை, திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், COP26 மாநாட்டில் வாசித்தளித்தார்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில், அக்டோபர் 31-ல் தொடங்கிய இம்மாநாடு, நவம்பர் 12ம் தேதி வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

காலநிலை மாற்றத்தால் உருவாகியுள்ள நெருக்கடிகளைக் களைய தேவையான மனிதவளம், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளங்களை வழங்க, உலகத்தலைவர்களிடையே உறுதியான, துணிவான நோக்கம் உள்ளதா என்பதைக் காண, உலகச் சமுதாயம் ஆவலோடு காத்திருக்கிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இச்செய்தியின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவர்களின் துணிவுக்கும் உறுதிக்கும் தற்போது நிலவிவரும் கோவிட் பெருந்தொற்று, பெரும் சவால்களை விடுத்துவருகிறது என்று இச்செய்தியில் கூறும் திருத்தந்தை, இந்த பெருந்தொற்றை வென்று, எதிர்கால வாழ்வை வளமாக்க, கடந்தகால தவறுகளிலிருந்து பாடங்களைக்



கற்றுக்கொள்வது மிக முக்கியம் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

### ஒருங்கிணைவதைத் தவிர, வேறு வழி நமக்கு இல்லை

பெருந்தொற்றை எதிர்த்துப் போராடவும், சுற்றுச்சூழல் ஆபத்துக்களை எதிர்கொள்ளவும், மனிதகுலம் இன்னும் அதிகமாக ஒருங்கிணைந்து உழைப்பதைத் தவிர, வேறு வழி நமக்கு இல்லை என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவரகள், தன் செய்தியில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

2050ம் ஆண்டுக்குள், கரியமில வாயுவின் வெளிப்பாட்டை, பூஜ்யம் அளவுக்குக் குறைப்பதற்கு, திருப்பீடம் உறுதி எடுத்துள்ளது என்றும், ஒருங்கிணைந்த சூழலியல் குறித்த விழிப்புணர்வை வழங்க, திருப்பீடம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்தும், திருத்தந்தையின் செய்தியை வாசித்த கர்தினால் பரோலின் அவர்கள் எடுத்துரைத்தார்.

### நல்லதொரு பூமிக்கோளத்தை விட்டுச்செல்ல...

அண்மைய ஆண்டுகளில், இளைய தலைமுறையினர் காலநிலை மாற்றத்தைக் குறித்தும், பூமிக்கோளத்தைக் காப்பது குறித்தும் காட்டிவரும் அக்கறையைக் குறித்து, தன் செய்தியின் இறுதியில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்று நம் தலைவர்கள் எடுக்கும் முடிவுகள், நாம் அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச்செல்லும் பூமிக்கோளத்தின் நலனைத் தீர்மானிக்கும் என்று கூறினார்.

தான் நேரடியாக பங்கேற்க ஆவல் இருந்தாலும், வர இயலாதச் சூழலுக்காக தன் செய்தியின் இறுதியில் வருத்தம் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், COP26 மாநாட்டில் கலந்துகொள்ளும் அனைவரோடும், தான், இறைவேண்டல் வழியே ஒன்றித்திருப்பதாகக் கூறி, தன் செய்தியை நிறைவுசெய்துள்ளார்.

*ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# இயற்கையை கழிவறையைப்போல் நடத்தியது போதும்

இயற்கையை கழிவறையைப்போல் நடத்தியது போதும், நம் வருங்காலத்தையும், மனிதர் அனைவரையும் பாதுகாப்பதற்கு, பேரார்வம் மற்றும் தோழமையுணர்வு ஆகியவற்றைத் தெரிவுசெய்வோம் என, வருங்காலத் தலை



COP26 மாநாட்டில் பிரித்தானிய பிரதமர் மற்றும் அரசுத்தலைவர் பைடன் ஆகியோருடன் ஐ.நா. பொதுச்செயலர் (Copyright 2021 The Associated Press. All rights reserved)

முறைகளின் சார்பாக உலக சமுதாயத்தை விண்ணப்பிக்கிறேன் என்று, COP26 உலக உச்சி மாநாட்டில் துவக்கயுரையாற்றிய ஐ.நா. தலைமைப் பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள் கூறினார்.

காலநிலை மாற்றம் உருவாக்கியுள்ள கடுமையான நெருக்கடிகள் பற்றிக் குறிப்பிட்ட கூட்டேரஸ் அவர்கள், இந்த மிகப்பெரும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வேண்டியவர்கள் நாமே எனவும், காலநிலையில் மாற்றம் நிகழ்வதை நாம் நிறுத்தவேண்டும், அல்லது, அது நம்மை நிறுத்திவிடும் என்றும், உலகத் தலைவர்களிடம் எடுத்துரைத்தார்.

புவியின் வெப்ப நிலையை 1.5 டிகிரி செல்சியசுக்கு உயராமல் காப்பதற்கும், காலநிலை மாற்றம் உருவாக்கியுள்ள பிரச்சனைகளால் பல்வேறு நிலைகளில் துன்புறும் ஏறத்தாழ 400 கோடி மக்களைப் பாதுகாப்பதற்கும், வளரும் நாடுகள், காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளுக்கென நூறு கோடி டாலர்கள் நிதியுதவிக்கு ஐ.நா. அளித்த உறுதிகள் செயல் படுத்தப்படுவதற்கும், அழைப்புவிடுத்தார் கூட்டேரஸ்.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# சிறந்த எதிர்காலம் குறித்த நடவடிக்கைத் திட்டம் 'அனைத்து புகழும் உமக்கே, இறைவா! - Laudato Si'

**கோலாலம்பூர்:** 'அனைத்துப் புகழும் உமக்கே இறைவா! (Laudato Si) எனும் அமைப்பின் 40 நாள் இறைவேண்டல் பரப்புரை நடவடிக்கை திட்டத்தை யொட்டி, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணைக்கான ஆயர் மன்றத்தின் படைப்புக்கான நீதி ஆணையம் (Episcopal Regional Creation Justice Commission) அதன் முதல் நடவடிக்கையாக, எதிர்கால சந்ததியினருக்கு பூமி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக 'ஒருங்கிணைந்த சூழலியல்' என்ற அழைப்பை தழுவி, முதல் இறைவேண்டல் கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

இந்த முதல் வெள்ளோட்ட நிகழ்வினை 'கரித்தாஸ் சிங்கப்பூர்' கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் வலையொலி (you tube) வழி படைத்தது என அதன் இயங்குனர் கிளர் வெஸ்ட்வூட் கடந்த 28 அக்டோபர் அன்று தெரிவித்தார். தொடக்க இறைவேண்டலை ஆயர் ஜோசப் ஹீ அவர்கள் கூற, –'அனைத்துப் புகழும்



உமக்கே, இறைவா! - Laudato Si'-யின் நடவடிக்கைத் திட்டத்தை இயங்குனர் கிளர் விளக்கினார். இந்த நடவடிக்கை திட்டத்தின் வழியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'ஒருங்கிணைந்த சூழியலை நோக்கி' எனும் கனவு நிறைவேறும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையைப் பகிர்ந்துகொண்டார்.

# திருத்தந்தை பிரான்சிஸ், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு

வத்திக்கான்: இந்தியக் குடியரசின் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, கடந்த அக்டோபர் 30, சனிக்கிழமை காலையில், வத்திக் கானின் Tronetto அறையில் தனியே சந்தித்துப் பேசினார்.

காலை 9.20 மணிக்கு முடிவுற்ற இவ்வுரையாடல் குறித்து அறிவித்த, திருப்பீடச் செய்தித் தொடர்பகம், இச்சந்திப்புக்குப்பின் மோடி அவர்கள், திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களையும், பன்னாட்டு உறவுகள் திருப்பீடத் துறையின் செயலர் பேராயர் பால் ரிச்சர்டு காலகர் அவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார் என்று கூறியது.

இச்சந்திப்புகளில், இந்தியாவுக்கும், திருப்பீடத்திற்கும் இடையே நிலவும் நல்லுறவு திருப்தியாக உள்ளது என்று கூறப்பட்டதாக அறிவித்த திருப்பீடச் செய்தித் தொடர்பகம், திருத்தந்தையும், இந்தியப் பிரதமரும் பரிமாறிக் கொண்ட பரிசுப்பொருள்கள் குறித்த விவரங்களையும் அறிவித்துள்ளது.

**திருத்தந்தை வழங்கியவை**

"பாலைநிலம் ஒரு தோட்டமாக மாறும்" என்று பொறிக்கப்பட்ட ஒரு வெண்கல ஓடு, திருத்தந்தை வெளியிட்டுள்ள ஏடுகள், 2021ம் ஆண்டின் அமைதி நாள் செய்தி, அனைவரும் உடன்பிறந்தோர் பற்றிய ஓர் ஏடு ஆகியவை.

**இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் வழங்கியவை**

வெள்ளியிலான ஒரு மெழுகுதிரி தண்டு சுற்றுச்சூழலுக்கு ஆதரவாக ஆற்றும் பணிகள் பற்றிய ஒரு தொகுப்பு ஆகியவை.

இந்தியாவில் 2014-ம் ஆண்டிலிருந்து பிரதமர் பதவியிலிருக்கும் நரேந்திர மோடி அவர்கள், முதன்முறையாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்துள்ளார். திருத்தந்தை, இந்தியாவுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வதற்கு தனது ஆவலை வெளிப்படுத்திய போதெல்லாம், மத்திய அரசிடமிருந்து அதிகாரப்பூர்வ அழைப்பிதழ் கொடுக்கப்படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், 1964-ம் ஆண்டில் திருத்தந்தை புனித 6-ம் பவுல் அவர்களும், 1986, 1999 ஆகிய இரு ஆண்டுகளில் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்களும் இந்தியாவுக்குத் திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர் என்பதும் கவனிக்கத் தக்கன.



திருத்தந்தை பிரான்சிஸ் பிரதமர் நரேந்திர மோடி

**பொதுக்காலம் 32-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | 1 அர 17:10-16 |
| தி. பாடல்: | 146: 7. 8-9a. 9bc-10 |
| 2ம் வாசகம்: | எபி. 9: 24-28 |
| நற்செய்தி: | மாற்கு 12: 38-44 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1
திருப்புகழ் மாலை -வாரம் 4

# பணக்காரர்களுக்கே மகிழ்ச்சி கிட்டும் என்ற உலக நடைமுறையை புரட்டிப் போடுவோம்!

**வத்திக்கன்:** தாழ்ச்சி, கருணை, கனிவு, நீதி, மற்றும் அமைதியை வாழ்வின் பாதையாக எடுத்துரைக்கும் இயேசுவின் மலைப் பொழிவின் நற்பேறுகள் (மத் 5:1-12a) பகுதியை வாழ்வின் பாதையாக ஏற்போம் என நவம்பர் 1, கடந்த திங்களன்று சிறப்பிக்கப்பட்ட புனிதர் அனைவரின் திருநாளன்று கேட்டுக் கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மகிழ்ச்சியையும் இறையரசையும் நோக்கி நம்மை வழிநடத்தும் இயேசுவின் நற்பேறுகள் பற்றிய உரை, பேறுபெற்றவர்கள் என்ற வார்த்தையுடன் துவங்கி, நற்பேறு, புனிதத்துவம் என்ற வாழ்வுத் திட்டம், நம் முயற்சியாலும், உலகப் பொருட்களை மறுதலிப்பதாலும் மட்டும் கிட்டுவதில்லை மாறாக, இறைவனின் குழந்தைகள் நாம் என்பதை மகிழ்வுடன் கண்டுகொள்வதிலிருந்து கிட்டுகிறது என்பதை வலியுறுத்துகிறது என, வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த மக்களுக்கு விளக்கினார் திருத்தந்தை.

இவ்வாறு நற்பேறுகளை நாம் கண்டு கொள்வது மனிதரின் வெற்றியல்ல, மாறாக, இறைவன் நமக்கு வழங்கியுள்ள கொடை என்றார். புனிதத்துவத்தின் முழுமையாக விளங்கும் இறைவன் நம்முள் வந்து குடியிருப்பதாலேயே நாம் புனிதத்துவத்தைப் பெறுகிறோம் என்று தெளிவுப்படுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி என்பது ஒரு சாதாரண மனித உணர்வு அல்ல. மாறாக, இறைவனிலிருந்து வரும் மன உறுதியையும் வல்லமையையும் பெற்று, வாழ்வின் அனைத்துச் சவால்களையும், அன்புடன் கூடிய அவரது அக்கறையில் எதிர் கொள்வதாகும் எனவும் எடுத்துரைத்த திருத்தந்தை, புனிதர்கள் அனைவரும், தங்கள் வாழ்வின் துன்பத் துயர வேளைகளிலும் இத்தகைய மகிழ்வை அனுபவித்துள்ளனர் என அவர் விளக்கினார் .

மகிழ்ச்சியற்ற நம்பிக்கை என்பது அடிமைப் படுத்தும் நடைமுறையாக மாறி, கவலையைக் கொணரும் ஆபத்தாக மாறக்கூடும் என்றுரைத்த திருத்தந்தை, நாம் மகிழ்ச்சியான கிறிஸ்தவர்களா? என்ற கேள்வியை எழுப்ப வேண்டும் என்றார். ஏனெனில், மகிழ்ச்சி இன்றி புனிதத்துவம் இல்லை என மேலும் அவர் எடுத்துரைத்தார்.

இரண்டாவது கருத்தாக, இறைவாக்குரைத்தல் பற்றி நோக்குவோம் என்ற திருத்தந்தை பிரான்சிஸ், பணக்காரர்களுக்கே மகிழ்ச்சி கிட்டும் என்ற உலக நடைமுறையை புரட்டிப் போட்டு, ஏழைகள், துயருறுவோர், நீதியின்பால் தாகமுடையோர் பேறுபெற்றோர் மற்றும் அவர்களே மகிழ்ச்சியைப் பெறுவர் என்பதை ஏற்போம் என்றார். ஏனெனில், மலைப் பொழிவின் கூற்றுகளைப் பின்பற்றி வாழ்வோர் இயேசுவைப் பின்பற்றி அவரின் வார்த்தைகளை வாழ்வாக்குவதன்வழி இந்த மகிழ்வைப் பெறுகின்றனர் என எடுத்துரைத்தார்.

இயேசு எடுத்துரைத்த நற்பேறுகள் என்பவை, புதிய மனிதகுலத்தைப்பற்றிய, புனித வாழ்வு நடைமுறைப்பற்றிய முன்னறிவிப்பாகும் எனவும் சுட்டிக் காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு முன்னறிவித்த இந்த வாழ்வுமுறைக்கு நாம் சான்றுகளாக வாழ்கிறோமா? என நம்மை நோக்கி நாம் கேள்வி எழுப்ப வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் நம்முன் முன்வைத்தார்.

திருமுழுக்கின்போது நாம் பெற்ற இறைவாக்குரைக்கும் தூண்டுதலை நாம் மற்றவர்களுக்கும் எடுத்துரைக்கிறோமா? இயேசுவின் புதிய வாழ்வு குறித்த செய்தியை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகின்றோமா? அல்லது நாம் மட்டும் சுகமாக வாழ்ந்தால் போதும் என இருந்துவிடுகிறோமா? போன்ற கேள்விகளை நமக்குள்ளேயே கேட்டு விடைகாண்போம் என்ற விண்ணப்பத்துடன் உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.



# நாம் பெற்றதை பிறரோடு பகிர்வதே மனித வாழ்வின் முழுமை !

இன்று ஆண்டின் பொதுக்காலம் 32ம் வாரத்தில் நுழைகிறோம். இன்றைய வாசகங்கள், இல்லாதவரோடு பகிர்வதில் முழுமையடையும் மனித வாழ்க்கை என்னும் சிந்தனையைத் தருகின்றது.

இன்றைய முதல் வாசகத்தில் சாரிபத்தைச் சார்ந்த கைம்பெண் எலியா இறைவாக்கினர் கேட்டதும் அப்பம் சுட்டுத் தருகின்றார். அவளிடம் அன்றைய பொழுதுக்கு மட்டுமே இருந்த மாவையும் எண்ணையையும் கொண்டு அப்பம் சுட்டுத் தருகின்றார். இதனால் பஞ்ச காலம் முடியும் மட்டும் அவளுடைய பாத்திரத்தில் மாவும் எண்ணையும் குறையாமல் இருந்ததை அறிகிறோம்.

நற்செய்தியில், இயேசு எருசலேம் திருக்கோவில் இருந்த காணிக்கை பெட்டிக்கு எதிராக அமர்ந்துகொண்டு மக்கள் அதில் காணிக்கை போடுவதை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கின்றார். செல்வர்கள் அதில் மிகுதியாக காணிக்கை செலுத்த, ஓர் ஏழைக் கைம்பெண்ணோ ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு செப்புக் காசுகளை காணிக்கையாக செலுத்துகின்றார். இதைக் கவனித்த இயேசு மற்ற எல்லாரும் தங்களிடம் இருந்த மிகுதியான வற்றிலிருந்து காணிக்கை செலுத்தினார்கள். இவரோ தன்னுடைய பிழைப்புக்காக வைத்திருந்த அனைத்தையுமே காணிக்கையாக செலுத்திவிட்டார் என்கின்றார்.

நற்செய்தியின் முற்பகுதியில் ஆண்டவர் இயேசு மறைநூல் அறிஞர்களின் போலித்தனத்தை, அவர்கள் கைம்பெண்களை எப்படியெல்லாம் வஞ்சிக்கின்றார்கள் என்பதை தோலுரித்துக் காட்டுகின்றார். அவற்றுள் ஒன்று 'கைம்பெண்களின் வீடுகளைப் பிடுங்கிக்கொள்கின்றார்கள்' என்பதாகும். ஆம், யூத சமூகத்தில் கைம்பெண்கள் மிகுந்த அவல நிலைக்கு உள்ளானார்கள். கணவனை இழந்து வாழ்ந்த அவர்கள் எல்லாராலும் வஞ்சிக்கப்பட்டார்கள். அதனால்தான் இயேசு அந்த ஏழைக் கைம்பெண்ணை மற்ற எல்லாரையும் விட மிகுதியாக காணிக்கை செலுத்தினார் என்று வியந்து பாராட்டுகின்றார்.

நாம் ஆண்டவருக்கும் அவருடைய அடியாருக்கும் முகம் கோணாமல் கொடுக்கின்றபோது அவர் நம்மை நிறைவாக ஆசிர்வதிப்பார் என்பதை ஏற்க வேண்டும். முதல் வாசகமும் நற்செய்தியும் இதை நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

நம்மைச் சுற்றியிருக்கும் பல கோடி ஏழைகள், தங்கள் வாழ்வில் பலமுறை, தங்களுக்குத் தாங்களே வழங்கிக்கொள்ளும் மரணதண்டனை தீர்ப்புக்களை இந்த வாசகங்கள் நமக்கு நினைவுறுத்துகின்றன. எலியா அந்த பெண்ணிடம், இறைவன் ஆற்றக்கூடிய அற்புதங்களை எடுத்துரைக்கிறார். எலியா சொன்னதெல்லாம் அந்தப் பெண்ணுக்கு விளங்கியதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால், "அவர் போய் எலியா சொன்னபடியே செய்தார்" என்று இன்றைய வாசகம் கூறுகிறது. தனது இயலாமையிலும், வறுமையிலும், பசியிலும் இன்னொரு மனிதரின் பசியைப் போக்கவேண்டும் என்ற ஆவலால், அவர் இப்படிச் செய்திருக்கலாம். ஏழையின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் (மத் 5:3) என்பது தெளிவாகிறது.

ஏழைகளின் மனதை ஆண்டவர் அறிவார். அவர்களுக்குத்தான், தாழ்வென்றால், தவிப்பென்றால், பசியென்றால் என்னவென்று அனுபவப்பூர்வமாகத் தெரியும். அவர்களுக்குத்தான், தங்களிடம் உள்ளதைப் பகிர்ந்து, பசியைப் போக்கும் புதுமை தெரியும். தங்கள் துன்பகளைவிட, மற்றவர்களின் தேவைகள், துன்பங்கள் இவற்றைத் துடைப்பதையே பெரிதாக எண்ணும் மனம் இருக்கும்.

இன்றைய இரண்டாம் வாசகமாகிய எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் "கிறிஸ்து தம்மையே ஒருமுறை பலியாகக் கொடுத்தார்" என்று கூறப்பட்டுள்ளது. இயேசுவின் வழியில் நடக்கும் நாம் கொடுப்பதில் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்னை தெரசா மற்றொரு வகையில் சொன்னார்: *"Give till it hurts"* அதாவது, "கொடுங்கள், உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் கொடுங்கள்... கொடுங்கள், உங்கள் உடலை வருத்திக் கொடுங்கள்." என்றார். இல்லை என்பார் இருக்கையில், இருப்பவர்கள் இல்லை என்றால் அது மனிதநேயமாகாது. செய்த தர்மம் தலை காக்கும். தர்மச் செயல்கள் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*